**S.O.P.No.189/2018**

24-06-2022 ஆம் தேதி அன்று சாட்சி PW.1 பி.ஆர்.நவீன்குமார் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை **(1** ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்**)**

எனது அம்மா, அப்பாவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்குத் தெரியாது. திருமணம் முடிந்து எங்கு குடியிருந்தார்கள் என்றும் எனக்குத் தெரியாது. திருமணம் முடிந்து கேரளாவில் வசித்தார்கள் என்றால், சரிதான். நானும், 4 ஆம் மனுதாரர் நிஷாவும்தான் எனது தாய், தந்தையருக்கு வாரிசுகள். பாலக்காட்டில் எனது அம்மா இருந்தபோது தீ விபத்தில் இறந்து விட்டார். நான் கோயமுத்தூரில் பிறந்தேன். நிஷா எந்த ஊரில் பிறந்தார் என்று எனக்குத் தெரியாது. நான் மூன்று வயது இருக்கும்வரை எனது தாய், தந்தையுடன் கேரளாவில் இருந்தேன் என்றால், சரிதான். தீ விபத்தில் அம்மா இறந்தபிறகு என்னை தாத்தா ராகவன் கோவைக்கு அழைத்து வந்து விட்டார். நிஷா எனது அப்பாவுடன்தான் கேரளாவில் இருந்தார். எனது அம்மா இறப்பிற்கு எனது அப்பா காரணம் என்பதால் என்னை எனது தாத்தா ராகவன் அழைத்து வந்து விட்டார் என்றால் சரியல்ல. நிஷாவை ஏன் அழைத்து வரவில்லை என்றால், எனது அப்பாவிடம் ஒரு குழந்தை இருக்கலாம் என்று எனது தாத்தா விட்டுவிட்டு வந்திருக்கலாம். தேவி அன்கோ என்ற பெயரில் எனது தாத்தா நடத்தி வந்த கடையின் வருமானத்தில் மனு சொத்து வாங்கப்பட்டது என்றால், சரியல்ல. தேவி அன் கோ என்ற பெயரில் கடை உள்ள இடம் எனது பாட்டியின் பெயரில் வாங்கப்பட்ட இடம் என்றால், சரிதான். திருச்சி சாலையில் தேவி அன் கோ என்ற பெயரில் கடை செயல்படுவதற்கு முன்பு காமராஜர் சாலையில் தேவி அன் கோ என்ற பெயரில் கடை ஒன்றினை எனது தாத்தாவும், எனது தாய் மாமாக்கள் (1,2 எதிர்மனுதாரர்கள்) இணைந்து நடத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. ரமேஷ் அண்ட் பிரதர்ஸ் என்ற பெயரில்தான் கடை நடத்தி வந்தார்கள். தேவி அன் கோ என்ற பெயரில் இல்லை. எனது தாத்தா சிங்காநல்லூரில் உள்ள கோத்தாரி மில்லில் வேலையை ராஜினாமா செய்துவிட்டதால் வருமானம் இல்லாமல் எனது பாட்டியின் நகைகளை வைத்து ரமேஷ் அன் பிரதர்ஸ் என்ற கடையை நடத்தினார் என்றால், சரியல்ல.

மேலும், பாட்டியின் அப்பா வேலாயுதம் கொடுத்த தொகைகளை வைத்துத்தான் எனது தாத்தா குடும்பத்தினையும், தொழிலையும் செய்து வந்தார் என்றால், சரியல்ல. 1975-ல் அவ்வாறு முதலில் தொழில் செய்து பின்பு அதிலிருந்து வந்த வருமானத்தில் சிங்காநல்லூரில் உள்ள இடத்தை வாங்கி அங்க தேவி அன் கோ என்ற பெயரில் தொழில் செய்தார் என்றால், சரியல்ல. மேலும், அதிலிருந்து வந்த வருமானத்தை வைத்தத்தான் தற்பொழுது உள்ள புதிய கட்டிடத்தை எனது தாத்தா ராகவன், மாமாக்கள் ரமேஷ் மற்றும் சுரேஷ் இணைந்து கட்டியுள்ளனர் என்றால், சரியல்ல. மேலும், அந்த புதிய கடையிலிருந்து வந்த வருமானத்தை வைத்துத்தான் மனுவில் குறிப்பிட்டுள்ள பங்குகள் வாங்கப்பட்டுள்ளன என்றால், சரியல்ல. எனவே அந்தச் சொத்து எனது பாட்டி விலாசினிக்குத்தான் சொந்தம் என்றால், சரியல்ல. எனவே எனது தாத்தா ராகவன் எழுதிய உயில் செல்லாது என்றால் சரியல்ல. எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள பங்குகள் எனது தாத்தாவின் வாரிசுகள் மற்றும் எனது மாமாக்களுக்கு உரிமையானது என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.14 பாகப்பிரிவினைப் பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. எனது தாத்தா நிறைய நாட்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு சர்க்கரை நோய் இருந்து வந்தது. மேலும் பக்கவாதம் இருந்தது என்றால் சரிதான். அவர் இறப்பதற்கு 10, 12 ஆண்டுகளாக மருத்துவமனையில் சிசிக்சை பெற்று வந்தார் என்றால் சரிதான். அவர் சிந்திக்கும் மனநிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. உயில் மற்றும் வாரிசுரிமை ஆவணங்களை எனது தாத்தா உடல்நிலை மற்றும் மனநிலை சரியில்லாத நிலையில் அவரை பட்டினி போட்டு மிரட்டியும், துன்புறுத்தியும் எழுதி வாங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

(இந்நிலையில் 1 ஆம் எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டலின்பேரில் மேலும் குறுக்கு விசாரணைக்கென 21-07-2022 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/பி.ஆர்.நவீன்குமார்,

ஒம்/கே.ராஜசேகர்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.